உ

சிவமயம்

இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு சுவாமி நெல்லையப்பர்
அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்கோவில்

திருநெல்வேலி

ஐப்பசித் திருக்கல்யாணத் திருவிழா அழைப்பிதழ்

18.10.2024 முதல்

29.10.2024 முடிய

அருள்மிகு **காந்திமதி அம்மன்**

வெளிப்பிரகாரத்தில்

சுவாமி நெல்லையப்பரை

வலம் வரும் வகையில் அமையப் பெற்ற

தங்கத்தேர் உலா

திட்டத்தில் ரூ. **2000/-** செலுத்தி

தங்கத்தேர் இழுத்து

அம்மன் அருள் பெறவும்.

இவன்

திருக்கோவில் நிர்வாகம்

உ
சிவமயம்

இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு சுவாமி நெல்லையப்பர்
அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்கோவில்

திருநெல்வேலி நகர்

ஐப்பசித் திருக்கல்யாணத் திருவிழா அழைப்பிதழ்

18.10.2024 முதல் 29.10.2024 முடிய

பேரன்புடையீர்! மெய்யன்புடையீர்!

நிகழும் மங்களகரமான குரோதிஆண்டு, **1200 ம் வருடம் ஐப்பசி மாதம் 18.10.2024 வெள்ளிக்கிழமை** அன்று **காலை 5.00 மணிக்கு மேல் 6.00 மணிக்குள்** கன்னியா லக்னத்தில் கொடியேற்று விழாவுடன் தொடங்கி, **ஐப்பசி மாதம் 29.10.2024 செவ்வாய் கிழமை வரை** அருள்தரும் காந்திமதி அம்மன் அருள்மிகு நெல்லையப்பர் சுவாமி ஐப்பசி திருக்கல்யாணத் திருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

திருக்கல்யாணத் திருவிழாவானது, அம்மை உலகைக் காத்தற் பொருட்டு, இறைவனை வேண்டித் தவமியற்றி, அவன் அருளை உலகம் பெறும்படி செய்வது என்பது புராண வரலாறு. உமாதேவி கயிலையினின்று நீங்கி, வேணுவனம் அடைந்து, முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்து, கம்பைநதியின் அருகிலே இறைவனை நினைத்துத் தவமிருந்து, நெல்லை நாதனின் திருவருட்கோலக் காட்சி எய்திப், பெருமானை மணந்தருளினார்.

திருக்கல்யாணத் திருவிழாவின் நுட்பம் யாதெனில், கடவுள், சிவனும் சக்தியுமாய் இயங்கி உயிர்களுக்கெல்லாம் தவமியற்றும் முறையை அறிவுறுத்தற் பொருட்டு தாயாய்த் தவக்கோலம் கொள்வதும், உயிர்களுக்குத், தவமுதிர்வில் காட்சிக் கொடுத்து இறைவன் பேரின்பம் அளிக்கிறார் என்பதை அறிவுத்தற் பொருட்டு, தந்தையாய் திருக்கோலக்காட்சி கொடுப்பதும் ஆகும். உயிர்களோடு இரண்டறக் கலந்து சிவமாந்தன்மைப் பெருவாழ்வு எய்துவதை அறிவுறுத்தற் பொருட்டு திருமங்கலநாண் பூட்டாகிய திருமணச் சடங்கு நிகழ்வதும், ஒருங்கமைந்து திருக்கல்யாணத் விழாவாய்த் திகழ்கின்றன.

இவ்வாறு உயர்ந்த தத்துவக் கருத்துக்களை உணர்த்தும் இத்திருக்கல்யாணத் திருவிழாவில் அன்பரெல்லாம், **அருள்தரும் அன்னை காந்திமதி உடனுறை அருள்மிகு நெல்லையப்பரை** வணங்கிப் பேரானந்தப் பெருவாழ்வு பெற்றிட வேண்டுகிறோம்.

இவண்

திரு. அ.அய்யர் சிவமணி
செயல் அலுவலர்

திருமதி. ப.கவிதா பிரியதர்ஷினி எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, திருநெல்வேலி

திரு. மு. செல்லையா
அறங்காவலர் குழுத் தலைவர்

திருமதி. ச. தனலெட்சுமி (எ) வள்ளி
ஆய்வாளர், இந்து சமய அறநிலையத்துறை
திருநெல்வேலி (மேற்கு)

திருமதி. ரா. சுப்புலெட்சுமி பி.எஸ்சி
உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை
திருநெல்வேலி

திருமதி. உஷா ராமன்
திரு. சொனா வே.வெங்கடாசலம்
திரு. ச.செல்வராஜ்
திருமதி. கீதா பழனி
அறங்காவலர் குழு உறுப்பினர்கள்

மற்றும் திருக்கோயில் பணியாளர்கள்

முதல் திருநாள்

ஐப்பசி மாதம்
18.10.2024 வெள்ளிக்கிழமை

அதிகாலை 5.00 மணி : **அம்பாள் பூங்கோயில் சப்பரத்தில் எழுந்திருந்து உட்பிரகாரம் வலம் வருதல்**

காலை 5.00 மணிக்கு மேல் 6.00க்குள் : **கொடியேற்றம்**

உபயதாரர் : பாட்டாக்குறிச்சி
S. சங்கர நாராயணன்
22, ஸ்ரீசிவசக்தி நிலையம், அதுரா சிதம்பரம் கார்டன்,
சி.என் கிராமம், திருநெல்வேலி.

இரவு 7.00 மணிக்கு : **அம்பாள் பூங்கோயில் வாகனத்தில் திருவீதி உலா**

கட்டளைதாரர் :
திரு. ஆர். சண்முகசுந்தரம் பிள்ளை
திரு. ஆர். அம்பலவாணன் பிள்ளை
பெருங்குடிப் பண்ணையார்கள்

பக்திக் கலைநிகழ்ச்சி

மாலை 6.00 மணி முதல்
இரவு 7.00 மணி வரை :

பக்திச்சொற்பொழிவு

திரு. முருக இளங்கோ

இடம் :
அம்பாள் கோவில்
ஊஞ்சல் மண்டபம்

நிகழ்ச்சி ஏற்பாடு :
K.K. ஜுவல்லர்ஸ்
56, மேல ரத வீதி, திருநெல்வேலி நகர்.

இரண்டாம் திருநாள்

ஐப்பசி மாதம்
19.10.2024 சனிக்கிழமை

காலை 8.00 மணி : **அம்பாள் வெள்ளிச்சப்பரத்தில் திருவீதி உலா**

உபயதாரர், திருவீதிஉலா, புஷ்பம் :
திரு. R.K.P.V. முத்துமணி
திருநெல்வேலி நகர்.

இரவு 7.00 மணிக்கு : **அம்பாள் வெள்ளி கமல வாகனத்தில் திருவீதி உலா**

உபயதாரர், அபிஷேகம், அலங்காரம், திருவீதி உலா :
திரு. A. மகாராஜன் மற்றும்
திருமதி. M. பத்மாவதி இணையர்.
மகாராஜா
பாரத் கேஸ் விநியோகஸ்தர்
சாந்தி நகர், திருநெல்வேலி.

பக்திக் கலைநிகழ்ச்சி

மாலை 6.00 மணி முதல்
இரவு 7.00 மணி வரை :

பரத நாட்டிய நிகழ்ச்சி

தாமிரசபை பரத நாட்டிய
பள்ளி மாணவியர்

இடம் :
அம்பாள் கோவில்
ஊஞ்சல் மண்டபம்

நிகழ்ச்சி ஏற்பாடு :
திருக்கோவில் நிர்வாகம்

மூன்றாம் திருநாள்

ஐப்பசி மாதம்
20.10.2024 ஞாயிற்றுக்கிழமை

காலை 8.00 மணி : ***அம்பாள் கமல வாகனத்தில் திருவீதி உலா***

உபயதாரர் திருவீதிஉலா, புஷ்பம் :
திரு. M. சிதம்பரகுமார்
பழையபேட்டை, திருநெல்வேலி.

இரவு 7.00 மணிக்கு : ***அம்பாள் சிம்ம வாகனத்தில் திருவீதி உலா***

உபயதாரர், அபிஷேகம், அலங்காரம் :
திரு. N. நயினார்தேவர் & சன்ஸ்
அம்மன் சந்நதி, திருநெல்வேலி

திருவீதி உலா : திரு. கணேசமூர்த்தி
1/1, சாரதம்பாள் நகர், சங்கர் நகர்,
திருநெல்வேலி.

பக்திக் கலைநிகழ்ச்சி

மாலை 6.00 மணி முதல்
இரவு 7.00 மணி வரை :

பல்சுவை நிகழ்ச்சி

ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி
சுவாமிகள் கோல்டன்
ஜுபிலி மெட்ரிகுலேஷன்
மேல்நிலைப்பள்ளி

இடம் :
அம்பாள் கோவில்
ஊஞ்சல் மண்டபம்

நிகழ்ச்சி ஏற்பாடு :
திருக்கோவில் நிர்வாகம்

நான்காம் திருநாள்

ஐப்பசி மாதம்
21.10.2024 திங்கள்கிழமை

காலை 8.00 மணி : ***அம்பாள் காமதேனு வாகனத்தில் திருவீதி உலா***

உபயதாரர் :
திரு. இரா.பழனி புஷ்பராஜ்
திருவீதி உலா, புஷ்பம் :
திரு. ப.கற்பகவள்ளி
மாலா மெடிக்கல் சென்டர், 180-4-35E
தெற்கு ரதவீதி. திருநெல்வேலி டவுண்

இரவு 7.00 மணிக்கு : ***அம்பாள் வெள்ளி ரிஷப வாகனத்தில் திருவீதி உலா***

உபயதாரர், அபிஷேகம், அலங்காரம் :
திரு.வா.கா.மீ.சுப்பிரமணியபிள்ளை & சன்ஸ்
புஷ்பம் உபயம் :
திரு. என்.நயினார் தேவர் & சன்ஸ்
திருவீதி உலா :
திரு. D. மணிகண்டன் அவர்கள்
MPR இன்பராஸ்க்ஷயர் சர்வீஸ், ஆலங்குளம்.

பக்திக் கலைநிகழ்ச்சி

மாலை 6.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை :

பக்திச்சொற்பொழிவு

திருமதி. கோமதி திருநாவுக்கரசு

இடம் : ***அம்பாள் கோவில் ஊஞ்சல் மண்டபம்***

நிகழ்ச்சி ஏற்பாடு :
அருண் ஜுவல்லரி, திருநெல்வேலி டவுண்

ஐந்தாம் திருநாள்

ஐப்பசி மாதம்

22.10.2024 செவ்வாய்கிழமை

காலை 8.00 மணி : ***அம்பாள் வெள்ளி ரிஷப வாகனத்தில் திருவீதி உலா***

உபயதாரர் :

திரு. எஸ்.ஐயப்பன் அவர்கள்

திருவீதி உலா, புஷ்பம் :

லெட்சுமி மெட்டல்ஸ், வாகைகுளம்,பேட்டை

இரவு 7.00 மணிக்கு : ***அம்பாள் இந்திர விமானச் சப்பரத்தில் திருவீதி உலா***

உபயதாரர் :

திரு. ஆவுடைநாயகம் அவர்கள்

அபிஷேகம், அலங்காரம், புஷ்பம் :

திரு. டி.ஏ.முத்துசாமி அவர்கள்

22, பாரதியார் தெரு, திருநெல்வேலி டவுண்

திருவீதி உலா :

திரு. S. பாலாஜி அவர்கள்

வையாபுரி நகர், திருநெல்வேலி

பக்திக் கலைநிகழ்ச்சி

மாலை 6.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை :

பரத நாட்டிய நிகழ்ச்சி

அழகிய கூத்தர் ஆடல் கூட்டம் பரத நாட்டிய பள்ளி

மாலை 7.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை :

பரத நாட்டிய நிகழ்ச்சி

ராம நாட்டியாலயா பரத நாட்டிய பள்ளி மாணவியர்

இடம் : ***அம்பாள் கோவில் ஊஞ்சல் மண்டபம்***

நிகழ்ச்சி ஏற்பாடு : ***திருக்கோவில் நிர்வாகம்***

ஆறாம் திருநாள்

ஐப்பசி மாதம்

23.10.2024 புதன்கிழமை

காலை 8.00 மணி : ***அம்பாள் வெள்ளிச்சப்பரத்தில் திருவீதி உலா***

உபயதாரர், திருவீதி உலா, புஷ்பம் :

கணேசவிலாஸ் பாத்திர வியாபாரம்

திருநெல்வேலி நகர்

இரவு 7.00 மணிக்கு : ***அம்பாள் வெள்ளிச்சப்பரத்தில் திருவீதி உலா***

உபயதாரர், அபிஷேகம், அலங்காரம், புஷ்பம், திருவீதி உலா :

திரு. சுப்பிரமணியன் அவர்கள்

வெள்ளாளஞ் செட்டியார்

பாத்திர வியாபாரிகள் சங்கம்

சுப்பிரமணியபுரம், திருநெல்வேலி நகர்

பக்திக் கலைநிகழ்ச்சி

மாலை 6.00 மணி முதல்

இரவு 7.00 மணி வரை :

பரத நாட்டிய நிகழ்ச்சி

நிருத்தியாஞ்சலி

நாட்டியப் பள்ளி

மாணவியர்

இடம் :

அம்பாள் கோவில்

ஊஞ்சல் மண்டபம்

நிகழ்ச்சி ஏற்பாடு :

திருக்கோவில் நிர்வாகம்

ஏழாம் திருநாள்

ஐப்பசி மாதம்

24.10.2024 வியாழக்கிழமை

காலை 8.00 மணி : ***அம்பாள் தவழ்ந்த திருக்கோலத்தில் தந்த பல்லாக்கில் திருவீதி உலா***

உபயதாரர், திருவீதி உலா, புஷ்பம் :

சௌபாக்கியா ஜுவெல்லர்ஸ்

107.மேல ரதவீதி, திருநெல்வேலி –6

இரவு 7.00 மணிக்கு : ***அம்பாள் வெள்ளி காமதேனு வாகனத்தில் திருவீதி உலா***

உபயதாரர், அபிஷேகம், புஷ்பம், அலங்காரம், உட்பிரகாரம் வலம் வருதல் :

வர்த்தகர் பலர் தர்ம பரிபாலன சங்கம்

இரவு 8.00 மணிக்கு : ***அம்பாள் வெள்ளை சாத்தி***

உபயதாரர், அபிஷேகம், அலங்காரம் புஷ்பம், திருவீதி உலா :

திரு. எம்.ராமசாமி அவர்கள்

259.சி. பாரதியார் தெரு, திருநெல்வேலி.

பக்திக் கலைநிகழ்ச்சி

மாலை 6.00 மணி முதல்

இரவு 7.00 மணி வரை :

பரத நாட்டிய நிகழ்ச்சி

சங்கர சரஸ்வதி நாட்டியப் பள்ளி மாணவியர்

இடம் :

அம்பாள் கோவில் ஊஞ்சல் மண்டபம்

நிகழ்ச்சி ஏற்பாடு :

திருக்கோவில் நிர்வாகம்

எட்டாம் திருநாள்

ஐப்பசி மாதம்

25.10.2024 வெள்ளிக்கிழமை

காலை 8.00 மணி : ***அம்பாள் வெள்ளி சப்பரத்தில் கோலாட்ட அலங்காரதில் பச்சை சாத்தி திருவீதி உலா***

உபயதாரர், திருவீதி உலா, புஷ்பம்

S. வாசு தேவராஜ்

தியாகராஜ நகர், திருநெல்வேலி நகர்.

இரவு 7.00 மணிக்கு : ***அம்பாள் தங்க கிளி வாகனத்தில் திருவீதி உலா தேர் கடாட்சம்***

உபயதாரர், அபிஷேகம், அலங்காரம் புஷ்பம், மற்றும் திருவீதி உலா :

திருமதி. P. சரளா

திரு. P. கோபிநாதன்

திரு. P. ரெங்கநாதன்

நெல்லை பெர்டிலைசர்ஸ், திருநெல்வேலி நகர்.

பக்திக் கலைநிகழ்ச்சி

மாலை 6.00 மணி முதல்

இரவு 9.00 மணி வரை :

பரத நாட்டிய நிகழ்ச்சி

கலாலயா பவுண்டேஷன்

இடம் :

அம்பாள் கோவில் ஊஞ்சல் மண்டபம்

நிகழ்ச்சி ஏற்பாடு :

திருக்கோவில் நிர்வாகம்

ஒன்பதாம் திருநாள்

ஐப்பசி மாதம்
26.10.2024 சனிக்கிழமை

காலை 8.00 மணி : **அம்பாள் செப்புத் தேரில் பவனி**

உபயதாரர், திருவீதி உலா, புஷ்பம் :
அ.பா.தேவேந்திர பூபதி, கூடுதல் ஆணையர்
த/பெ அ. பாஸ்கர சேதுபதி
18, தண்டபாணி வீதி, குபேரபட்டிணம், பழனி – 624 601

மதியம் 2.00 மணியளவில் : **அம்பாள் சிவபூஜை செய்தல்**

இரவு 7.00 மணிக்கு : **சப்தாவர்ணம், தந்தப் பல்லக்கு திருவீதி உலா**

அபிஷேகம், அலங்காரம்
புஷ்பம், மற்றும், திருவீதி உலா :
மேடை தளவாய் கட்டளை
திருநெல்வேலி.

பக்திக் கலைநிகழ்ச்சி

மாலை 6.00 மணி முதல்
இரவு 7.00 மணி வரை :

பரத நாட்டிய நிகழ்ச்சி
கலாலயா பவுண்டேஷன்

இடம் :
அம்பாள் கோவில்
ஊஞ்சல் மண்டபம்

நிகழ்ச்சி ஏற்பாடு :
திருக்கோவில் நிர்வாகம்

பத்தாம் திருநாள்

ஐப்பசி மாதம்
27.10.2024 ஞாயிற்றுக்கிழமை

காலை 8.00 மணி : **அம்பாள் தந்த பல்லக்கில் தீர்த்தவாரி**

திருவீதி உலா, புஷ்பம் :
பிள்ளையன் கட்டளை

இரவு 7.00 மணிக்கு : **ஊஞ்சல் மண்டபத்தில்**
அம்மனுக்கு அபிஷேகம்
அலங்கார தீபாராதனை

உபயதாரர், அபிஷேகம், அலங்காரம் :
தபசுக் கட்டளை கமிட்டி

இரவு 9.00 மணிக்கு : **சுவாமி அபிஷேகம்**

உபயதாரர் :
திரு. சு. சொக்கலிங்கம் பிள்ளை
ஜவுளி வியாபாரம்
திரு. சொனா.வே.வெங்கடாச்சலம்



பக்திக் கலைநிகழ்ச்சி

மாலை 6.00 மணி முதல்
இரவு 7.00 மணி வரை :

பரத நாட்டிய நிகழ்ச்சி
கலாலயா பவுண்டேஷன்

இடம் :
அம்பாள் கோவில்
ஊஞ்சல் மண்டபம்

நிகழ்ச்சி ஏற்பாடு :
திருக்கோவில் நிர்வாகம்

பதினொன்றாம் திருநாள்

ஐப்பசி மாதம்
28.10.2024 திங்கட்கிழமை

காலை 8.00 மணி : *சுவாமி ரிஷப வாகனத்தில் காட்சி கொடுக்க எழுந்தருளல்*

உபயதாரர், புஷ்பம், அபிஷேகம், அலங்காரம் :
திரு. K.S. கணபதி பிள்ளை
திருநெல்வேலி நகர்.

திருவீதி உலா :
திருக்கோவில் நிர்வாகம்

தபசுக்காட்சி

முற்பகல் 11.00 மணிக்கு மேல் 12.00 மணிக்குள்
அம்பாளுக்கு சுவாமி ரிஷப வாகனத்தில்
காட்சி கொடுத்தருளல்.

இடம் : **திருநெல்வேலி நகர், பேட்டை ரோடு, காட்சி மண்டபம்**

சிறப்பு நாதஸ்வர இசை : **நெல்லை RS. மணிகண்டன் குழுவினர்**

பக்திக் கலைநிகழ்ச்சி

மாலை 6.00 மணி முதல்
இரவு 7.00 மணி வரை :

பரத நாட்டிய நிகழ்ச்சி

ஸ்ரீ ராம் அகாடமி
பள்ளி மாணவியர்

இடம் :
அம்பாள் கோவில்
ஊஞ்சல் மண்டபம்

நிகழ்ச்சி ஏற்பாடு :
திருக்கோவில் நிர்வாகம்

பன்னிரெண்டாம் திருநாள்

ஐப்பசி மாதம்
29.10.2024 செவ்வாய்க்கிழமை

சுவாமி அம்பாள் திருக்கல்யாணம்

நேரம் : அதிகாலை 4.30 மணிக்கு மேல் 5.30 மணிக்குள்
இடம் : திருக்கோவில் ஆயிரங்கால் மண்டபம்

திருக்கல்யாண மணமேடை அலங்காரம் :
உபயதாரர் : **அ.பா.தேவேந்திர பூபதி** (கூடுதல் ஆணையர்)
த/பெ அ. பாஸ்கர சேதுபதி, 18.தண்டபாணி வீதி, குபேரபட்டிணம், பழனி – 624 601

காலை 9.30 மணிக்கு சுவாமி அம்பாள் பூம்பல்லக்கில்
பட்டணப்பிரவேசம் திருவீதி உலா நடைபெறும்.

திருவீதி உலா புஷ்பம் உபயம் : திரு. **ராதாகிருஷ்ணன்**
ஸ்ரீ வரதராஜ பெருமாள் ரியல் எஸ்டேட் & கன்ஸ்ட்ரசன்

அம்பாள் திருவீதி உலா புஷ்பம் உபயம் : திரு. **P.K.S. செல்வராஜ்**
காய்கறி வியாபாரம், மேலரத வீதி, திருநெல்வேலி டவுண்

சிறப்பு நாதஸ்வர இசை : **நெல்லை RS. மணிகண்டன் குழுவினர்**

29.10.2024 முதல் 31.10.2024 முடிய
ஊஞ்சல் மண்டபத்தில் ஊஞ்சல் விழா நடைபெறும்

உபயதாரர் :
நாள் 29.10.2024 : ***எம். கோபாலன், G.P. ஜுவல்லரி*** திருநெல்வேலி
நாள் 30.10.2024 : ***A. சோமசுந்தரம், A. நமச்சிவாயம்*** கோல்டன் நகர் தென்பத்து
நாள் 31.10.2024 : ***காந்திமதி கைங்கர்ய கமிட்டி*** திருநெல்வேலி

ஐப்பசி மாதம் | **01.11.2024 – வெள்ளிக்கிழமை**

இரவு சுவாமி அம்பாள் ரிஷப வாகனத்தில்
மறுவீடு பட்டணப்பிரவேசம் வீதி உலா நடைபெறும்.

கட்டளைதாரர் : ***திருக்கோயில் நிர்வாகம், திருநெல்வேலி***

அன்னதானத் திட்டம் வேண்டுகோள்

கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும், கருவுக்குள் இருக்கும் சிசுவுக்கும், கண்ணறியா வண்ணம் உணவளித்து காக்கும் நுண்ணறிவாளனாம் இறைவன், மண்ணுலகின் மானிடரை காக்க நெல்லுக்கு வேலியிட்டு, திருவிளையாடல் நிகழ்த்திய இத்திருத் தலத்தில் அன்பர்தம் அழிபசி தீர்க்க அன்னதானம் செய்வது, மிக்கப் புண்ணியம் தரும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அன்னதானத் திட்டத்தின் மூலம் இத்திருக்கோயிலில் தினசரி 100 பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு நாள் உணவு வழங்கும் வகைக்கு ரூ. 3500/-

திருவிழா காலங்களில் 500 பேருக்கு ரூ. 17,500/-

இத்திட்டத்தின்படி, அன்னதானம் செய்ய விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளும்படியும், அன்னதானம் செய்ய விரும்பும் தேதி குறித்த விபரம் தெரிவிக்கும்படியும் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

மேலும் ஆண்டுக்கு ஒருமுறை நன்கொடையாளர் விரும்பும் ஒரு நாளில் பக்தர்களுக்கு உணவு வழங்குவதற்கு ரூ.70,000/-ஐ நிரந்தர முதலீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து உணவு வழங்கப்படும்.

இத்தகு சீர்மிகு அன்னதான திட்டத்தில் சேர்ந்து அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருவருட்கடாட்சம் பெறும்படியாக அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அன்னதான திட்டத்திற்கு நிதியளிப்போர்க்கு வருமானவரிச் சட்டப் பிரிவு 80 G ன்படி வருமான வரி விலக்கு உண்டு.

பக்தர்கள் ரூ.2,000/- செலுத்தி
தங்கத் தேர் இழுத்து காந்திமதி அம்பாள்
அருள் பெற வேண்டுகிறோம்

இவண் : **திருக்கோவில் நிர்வாகம்**

வீதி உலாவில் நாதஸ்வர இசை :

1–ம் திருநாள் முதல் 15–ம் திருநாள் வரை
(18.10.2024 முதல் 01.11.2024 முடிய)

திருக்கோயில் மேளம்
நாதஸ்வரம், தவில் குழுவினர்

விழா நாட்களில் தினசரி இரவு அம்பாள் வீதி உலாவில்
நெல்லை சிவகணங்களின் பஞ்ச வாத்திய இசை,
திருநெல்வேலி சிவபூஜைச் செல்வர்களின் இசை
திருமுறைப் பாராயணம் நடைபெறும்.

திருக்கோவிலுக்கு காணிக்கைகள் அனுப்ப வேண்டிய முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு நெல்லையப்பர்
அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்கோவில்
திருநெல்வேலி நகர் - 627 006. தொலைபேசி : 0462 - 2339910.
Email ID : arulmigunellaiappartemple.tvl@gmail.com

வெள்ளித் தேர் திருப்பணி

இது திருக்கோயிலில் புதியதாக வெள்ளித்தேர் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி புதியதாகச் செய்யப்படும் வெள்ளித்தேருக்கு பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் தங்களால் இயன்ற அளவில் வெள்ளியாகவோ அல்லது பணமாகவோ திருக்கோவில் அலுவலகத்தில் செலுத்தி இரசிது பெற்றுக் கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இத்திருக்கோயில் கட்டுபாட்டின் கீழ் செயல்பட்டு வரும் திருநெல்வேலி மாவட்டம், பாளை மேட்டுத்திடலில் அமைந்துள்ள ஸ்ரீ சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரம் மாணவிகளுக்கு உணவு வழங்க விருப்பம் உள்ளவர்கள் உணவிற்க்கு ரூ. 10,000/- இத்திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

போத்திஸ்
ஸ்வர்ண மஹால்

இது பரிபூரணத்தின் அடையாளம்!

* திருநெல்வேலி
* சென்னை
* திருவணந்தபுரம்
* திருச்சி
* கோயம்புத்தூர்

திருக்கோவிலுக்கு நன்கொடைகள் மற்றும்
காணிக்கைகள் அனுப்ப வேண்டிய முகவரி :

செயல் அலுவலர்
அருள்மிகு நெல்லையப்பர்
அருள்தரும் காந்திமதி அம்பாள் திருக்கோவில்
திருநெல்வேலி நகர் - 627 006.
தொலைபேசி : 0462 - 2339910.
Email ID : arulmigunellaiappartemple.tvl@gmail.com
Website : www.kanthimathinellaiappartnhrce.in